சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **123/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-13 |
| சாட்சியின் பெயர் | : | மதன் |
| தந்தை பெயர் | : | பகத்சிங் |
| கிராமம் | : | திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | மதன் டிஜிட்டர் ஸ்டுடியோ |
| வயது | : | 33 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். நான் திருத்துறைப்பூண்டியில் டிஜிட்டல் ஸ்டுடியோ வைத்துள்ளேன். அ.சா.1 குமார் என்பவரை எனக்கு தெரியும். எதிரியை எனக்கு தெரியாது. கடந்த

02.04.2025-ம் தேதி அடையாளம் தெரியாத ஒரு பெண்ணும் அவரது மகளும் வந்தார்கள். என்னிடம் ஒரு மொபைல் போனை கொடுத்தார்கள். மொபைலில் உள்ள போட்டோக்களை எடுத்துக்கேட்டார்கள். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் புகைப்படங்கள் அனைத்தும் நான் எடுத்துக்கொடுத்தது தான். என்னிடத்தில் காண்பிக்கப்படும் 11 புகைப்படங்கள் அனைத்தும் நான் எடுத்தது தான் அந்த புகைப்படங்கள் **சா.பொ.1-ன்** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:

என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும் மொபைல்போன் எந்தமாதிரியான மொபைல் போன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள போட்டோக்கல் அனைத்திலும் என்னுடைய கடையின் சீல் மற்றும் கையெழுத்துக்கள் இடம் பெறவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னிடம் மேற்கண்ட புகைப்படங்கள் என்னுடைய கடையில் இருந்ததற்கான சான்று எதையும் என்னிடம் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.12 18:48:28 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு ) வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், திருவாரூர்.